Australian Government
Department of Immigration and Citizenship

# பாராட்டுகளும் புகார்களும்





## பாராட்டு அல்லது புகார் ஒன்றினை நான் தெரிவிப்பது எப்படி?

பாராட்டு அல்லது புகார் ஒன்றினைத் தெரிவிக்க நீங்கள் செய்யவல்லதுஹ

- 133 177 என்ற எண்ணுடன் வேலை நேரங்களில் பொது தகவல் அமைப்புடன் (Global Feedback Unit- ஆஸ்திரேலியாவிற்குள் இலவசம்) தொடர்பு கொள்ளுங்கள்.
- www.immi.gov.au என்ற இணையப்பக்கத்தில் இணையம் மூலமாய் உதவித்தகவல் படிவம் (Feedback form) ஒன்றினைப் பூர்த்தி செய்யுங்கள்.
- எழுத்து மூலம் தெரியப்படுத்தவும்ஹ
  The Manager
  Global Feedback Unit
  GPO Box 241
  MELBOURNE VIC 3001
  AUSTRALIA
- உங்களுக்கு அருகாமையிலுள்ள குடிவரவு மற்றும் குடியுரிமைத் துறையினரது (DIAC) அலுவலகத்தில் எங்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளுங்கள்.

## எதைப்பற்றி புகார் அல்லது பாராட்டினை நான் தெரிவிக்கலாம்?

இத்துறையினரால் வழங்கப்படும் அல்லது நிதியுதவியளிக்கப்படும் சேவைகளின் எந்த அம்சம் குறித்தும் நீங்கள் புகார் அல்லது பாராட்டினைத் தெரிவிக்கலாம். விசா ஒன்றின் மீது எடுக்கப்பட்ட முடிவு குறித்து உங்களுக்கு அதிருப்தியிருப்பின் அம்முடிவினை மேலாய்வு செய்யுமாறு கோர உங்களுக்கு உரிமையிருக்கலாம். துறையினரது இணையப்பக்கமான www.immi.gov.au வில் நீங்கள் மேலதிகத் தகவல் பெறலாம்.

## எனது புகார் குறித்து வேறு யார்யாருக்குத் தெரிய வரும்?

உங்களது அந்தரங்கம் மற்றும் இரகசியத்தன்மை மதித்துப் பாதுகாக்கப்படும். உங்களது பெயரைத் தெரிவிக்க உங்களுக்கு விருப்பமில்லையேல், நீங்கள் பெயரினைத் தெரிவிக்க வேண்டியதில்லை. நீங்கள் பெயரைத் தெரிவிக்கும் பட்சத்தில் நீங்கள் எம்முடன் கொள்ளும் விவகாரங்களில் வேற்றுமைப்படுத்தப்பட்டோ அல்லது இழப்பதற்கும் ஆளாகும் வகையிலோ நீங்கள் நடத்தப்பட மாட்டீர்கள்.

## இதற்கு எவ்வளவு காலமாகும்?

உங்களது புகார் தொலைபேசி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ தெரிவிக்கப்பட்டால் ஒரு வேளை நாளுக்குள் அது பெற்றுக்கொள்ளப்படும் மற்றும் 10 வேலை நாட்களுக்குள் அதற்குப் பதில் அளிக்கப்படும்.

உங்களது புகார் தபால் மூலம் அனுப்பப்பட்டால் ஐந்து வேலை நாட்களுக்குள் அது பெறப்படும் மற்றும் 20 வேளை நாட்களுக்குள் அதற்குப் பதில் வழங்கப்படும்.

## ஆஸ்திரேலியாவில் பாராட்டு அல்லது புகார் ஒன்றைத் தெரிவிப்பதில் எனக்கு உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?

உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்படின் தொலைபேசி எண் 131 450 மூலம் மொழிபெயர்ப்பாளர் மற்றும் உரைபெயர்ப்பாளர் சேவையுடன் (TIS) இலவசத் தொடர்பு கொள்ளலாம்.

☏ செவிமடுத்தல், பேசுதல் மற்றும் தொடர்பாடலில் பிரச்சினை இருப்பின் தேசீயம் ரிலே சேவை (National Relay Service-NRS) மூலம் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம். வுநஒவ வுநடநிழநெ (TTY) அல்லது அழனநஅ மூலமாய் அழைப்பவர்கள் 133 677 மூலம் NRS உடன் இலவசமாய்த் தொடர்பு கொள்ளலாம்.

Speech to Speech Relay வசதி தேவைப்பட்டால் National Relay Service (NRS) உடன் 1300 555 727 என்ற எண் மூலம் இலவசத் தொடர்பு கொள்ளலாம்.

## இதற்குப் பிறகும் எனக்குத் திருப்தியில்லை என்றால் நான் என்ன செய்யலாம்?

உங்கள் புகாரை நாங்கள் அணுகிய முறை குறித்து உங்ளுக்குத் திருப்தி இல்லையெனில் நீங்கள் பின்வருவோருடன் தொடர்பு கொள்ளலாம்.

- Global Feedback Unit உடன் தொடர்பு கொண்டு என்ன காரணம் என்று எமக்குத் தெரிவியுங்கள்.
- பொதுநல அரசுக் குறைகேட்பாளருடன் (the Commonwealth Ombudsman) எந்நேரத்திலும் திங்கள் – வெள்ளி காலை 9.00 - மாலை 5.00 வரை தொலைபேசி 1300 362 072 மூலம் (உள்ளூர் அழைப்புக் கட்டணத்திற்கு) தொடர்பு கொள்ளலாம் அல்லது ombudsman@ombudsman.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
- அவுஸ்திரேலியப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு கொள்ளலாம்.

## மற்ற பயனளிக்கவல்ல தொடர்புகள்

### அவுஸ் திரேலியாவுக்குள்ளாக

பொது விசாரணைகள் அல்லது தகவலுக்கான வேண்டுகோள்கள் பொது விசாரணை இணைப்பிற்கு 131 881 என்ற (இலவச) எண் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது www.immi.gov.au எமது வலைப்பக்கத்தைப் பாருங்கள்.

ஆஸ்திரேலியக் குடியுரிமை குறித்த விசாரணைகள் ஆஸ்திரேலியக் குடியுரிமை இணப்பிற்கு 131 880 என்ற எண் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது www.immi.gov.au எனும் எமது வலைத்தளத்தைப் பாருங்கள்.

### ஆஸ்திரேலியாவிற்கு வெளியே

உங்களுக்கு அருகாமையிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம், கான்சுலேட் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகப் பணியாளர் ஒருவருடன் பேசுங்கள். தொடர்பு விவரங்களை உறுதிப்படுத்திக்கொள்ள உள்ளூர் தொலைபேசிப் புத்தகத்தைப் பாருங்கள் அல்லது றறற.ைஅஅை.பழஎ.யர எனும் எமது வலைத்தளத்தைப் பாருங்கள்.

உங்களது அந்தரங்கத் தன்மையைப் பாதுகாப்பது குறித்த மேலதிகத் தகவல்கள் கிட்டுமிடம்ஹ www.privacy.gov.au

ஆஸ்திரேலியக் கடவுச்சீட்டுகள் (Austalian passports)

குறித்த தகவல்களுக்காக www.passports.gov.au என்ற வலைத்தளத்தில் வெளி விவகாரங்கள் மற்றும் வணிகத் துறையுடனும் (Department of Foreign Afffairs and Trade DFAT), தொலைபேசி மூலமாக 131 232

என்ற எண்ணுடனும் (ஆஸ்திரேலியாவிற்குள் இலவசம்) தொடர்பு கொள்ளுங்கள் அல்லது உங்களுக்கு அருகாமையிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம், கான்சுலேட் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் (பார்க்கஹ www.dfat.gov.au).

இத்துறையினரது எவ்விதமான சேவைகள் குறித்தும் பாராட்டுக்களோ அல்லது புகார்களோ தெரிவிக்க வேண்டுமெனின் வேலை நேரங்களில் 133 177 என்ற எண்ணுடன் (ஆஸ்திரேலியாவில் இலவசம்) தொடர்பு கொள்ளவும் அல்லது www.immi.gov.au எனும் எமது வலைத்தளத்தைப் பார்க்கவும் மற்றும் www.immi.gov.au இல் உங்களுக்கு அருகாமையிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம், கான்சுலேட் அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

DIAC07/00437

Design date 10/07
© Commonwealth of Australia [2007]